## ஆகஸ்ட் – 23

**"இப்பொழுது விசுவாசம், நம்பிக்கை, அன்பு, இம்மூன்றும், நிலைத்திருக்கிறது. இவைகளில் அன்பே பெரியது. " 1 கொரி 13 : 13.**

அன்பு எல்லாவற்றிலும் மிகவும் தலைசிறந்ததாயிருக்கிற பிரகாரம், அது நிலைத்திருக்கிறதொன்றாகவும் இருக்கிறது. ஏனென்றால், தரிசிப்பதும் அறிவதும் முற்றுப்பெற்றபிறகு விசுவாசம் முடிவுக்கு வராதா? நம்முடைய நம்பிக்கையின் எல்லா நற்பலன்களையும் நாம் அடைந்து நமது பரமபிதாவினுடைய வாக்குத்தத்தங்களுக்குரியதை உடையவர்களாக இருக்கும்போது, நம்பிக்கை உண்மையாகவே முடிவுக்குவராதா? ஆனபோதிலும், அன்பிற்கு ஆரம்பம் இல்லாதிருந்ததுபோல, அது ஒருபோதும் அழிந்துபோகாது. தேவன் அன்பாகவே இருக்கிறார். அவர் ஆரம்பமில்லாதவராய் இருக்கிறதுபோல, அன்புக்கும் ஆரம்பமில்லாதிருந்தது. ஏனென்றால், அது அவருடைய குணம், அவருடைய மனசார்பு, அவர் நித்தியமாக நிலைத்திருக்கிறது போல, அன்பு நித்தியமாக நிலைத்திருக்கும். **- Z ’03, 58(R 3150)**

விசுவாசம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் குணசீலங்களில் மிகச் சிறந்தவை. ஜீவியத்தின் போர்களிலே, நம்பிக்கையோடு தேவனுடைய வாக்குத்தத்தங்களை உபயோகிக்க விசுவாசம் சாத்தியமாக்குகிறது. இந்தப் போர்களில் கர்த்தருக்காக செயல்படவும், துணிவு கொள்ளவும் நம்பிக்கை நம்மை சாத்தியமாக்குகிறது. அந்தப் போர்களை இலகுவாக்கி அவைகளை மகிமையான வெற்றிகளாக மாற்றி நம்மை இந்தப் போர்களின் கஷ்டங்களில் சந்தோஷப்படவும், பிரியப்படவும் சக்தி பெற்றவர்களாயிருக்க அன்பு நம்மை சாத்தியமாக்குகிறது. விசுவாசமும், நம்பிக்கையும் அன்பின் இரு அடிமைகள். அன்பே இன்பமான வீட்டின் மகிமையான அழகான எஜமானி இவளே தேவன் கிறிஸ்து இவர்களுக்கு ஒப்பான ஒரு குணம். எல்லா குணசீலங்களிலும் அன்பு மிகவும் தேவனைப் போலவும் கிறிஸ்துவைப் போலவும் இருக்கிறதினால், இந்த மூன்று குணசீலங்களில் அன்பே மிகவும் பெரியது. **- P ’34, 110.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**2சாமு 22:31; சங் 9:9,10; 32:10; 34:8,22; நீதி 3:5; ஏரே 17:7,8; மத் 21:21,22; மாற் 9:23 ; யோவா 11:25-27; ரோமா 3:19-5:2; 9:31-33; 10:4-10; கலா 3; எபே 6:16; எபி 4:1-10; 11; யாக் 2; சங் 16:9,10; 31:24; 33:18; 43:5; 71:5,14; 119:74,81,116,166; அப் 23:6; 24:14,15; 26:6,7; ரோம 5:2-5; 8:24; 12:12; 15:4,13; எபே 1:18; கொலோ 1:5,23,27; 1தெச 1:3; 5:8; தீத் 2:13; எபி 6:11,18,19; 1பேது 1:3,13,21; 1யோவா 3:3; யோவா 3:16; 17:23,26; ரோம 5:8; யோவா 10:11,15; 13:2,34; 21:17; 1கொரி 13.**

.

**கோபுர வாசிப்பு : Z ’15, 115 (R 5668)**

**வினாக்கள் : இந்த வாரத்தில் விசுவாசம், நம்பிக்கை, அன்பு ஆகியவற்றை பழக்கத்தில் கொண்டு வந்தேனா? எப்படி? ஏன்? எந்தச் சந்தர்ப்பங்களில் பலன்கள் எவை?**